# ஸ்பிக் பண்ணைச்செய்தி


| | | | | |
|---|---|---|---|---|
| விலை ரூ. 20<br>Price Rs. 20/- | மலர் - 5<br>Volume - 5 | இதழ் - 1<br>Issue - 1 | இருமாத இதழ்<br>Bi-monthly | பிப்ர 2015 - மார்ச் - 2015<br>Feb 2015 - March - 2015 |




# வளம் கொழிக்கட்டும்

வேளாண்மையில் இன்று அநேக நவீன தொழில்நுட்பங்கள் இடம்பெற்று செயல்படவும் ஆரம்பித்திருக்கிறது. அவற்றைச் செயலாக்கப் படித்த இளைஞர்களின் பங்கு அதிகம் தேவை. வேளாண் குடும்பத்தில் பிறந்து பட்டப்படிப்பு முடித்துவிட்டு வேலை தேடிக் கிடைக்காமல் இருக்கும் எத்தனையோ இளைஞர்கள் இன்று கிராமங்களில் இருக்கத்தான் செய்கிறார்கள். படித்தவர்கள் பயிர்த் தொழிலுக்கு வரத்தடை செய்யும் ஒரே காரணி, வேளாண்மை குறித்தத் தாழ்வு மனப்பான்மைதான். எத்தனை பேர் வேலையில்லாது இருக்கிறார்களோ அத்தனை பேருக்கும் வேலைதர வேளாண்மையில் வாய்ப்புகள் உண்டு. நிழல் வலை நாற்றங்கால், பசுமைக் குடில், குளிரூட்டப்பட்ட வேளாண் கிடங்குகள் இவை அனைத்தும் வேளாண் சார்புடைய தொழில்களே. பசுமைக் குடிலில் பயிர் செய்வது இன்று பரவலாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சோர்வை உண்டாக்கும் தாழ்வு மனப்பான்மையை உதறிவிட்டு புத்துணர்ச்சியோடு செயல்பட இளைஞர்களே முன் வாருங்கள் !

அனேக தமிழக விவசாயிகள் இன்று காய்கறி, வாழை, திராட்சை போன்ற லாபகரமான பயிர்களைத் தெறிவு செய்து, வெற்றி அடைந்து வருகிறார்கள் என்பது மகிழ்ச்சியைத் தருகிறது.



இவற்றுடன் ஆடு வளர்ப்பு, வான்கோழி வளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு போன்ற வேளாண் சார்புடைய தொழில்களையும் சேர்த்து ஒருங்கிணைந்த பண்ணையத்தை உருவாக்கி உபரி வருமானம் பெற வழி வகைகள் செய்ய வேண்டும்.

வேளாண்மையின் அடுத்த சவால் என்ன வென்றால், தோட்டக்கலைப் பயிர்களும் பணப்பயிர்களும் தொடர்ந்து பயிர் செய்து வருவதால் இன்று தமிழகத்திலுள்ள மண் வகைகள் மண்வளத்தை இழந்து போய்க் கொண்டிருக்கின்றன. மண்ணின் அங்ககக் கரி இருப்பும், நுண்ணுட்டச் சத்துக்களின் இருப்பு நிலையும் கவலை தரக்கூடிய அளவிற்குக் குறைந்து போய்விட்டதால், அவற்றைச் சரி செய்ய எமது நிறுவனம் புதியபல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இரசாயன உரங்களை மட்டுமே வழங்கி வந்த ஸ்பிக் தற்போது இயற்கை இடு பொருட்களான ஸ்பிக்சுரபி, ஸ்பிக் ஜோதி, ஸ்பிக் ஜெயந்தி, ஸ்பிக் தீபம் போன்ற உரங்களையும், ஸ்பிக் நரிஷ், ஸ்பிக் ஃப்ளரிஸ், ஸ்பிக் சிங்க் சல்பேட் போன்ற நுண்ணுட்ட உரங்களையும், ஸ்பிக் மேக்ஸ், ஸ்பிக் எம்பவர் போன்ற பயிர் செயல் ஊக்கிகளையும் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

சொட்டு நீர் மூலம் உரச்சத்துக்கள் விரையமாகாமல் பயிர்களுக்கு கிடைக்கும் வகையில் முழுவதும் எளிதில் நீரில் கரையும் ஸ்பிக் ட்ரையம்ப் போன்ற நீர்வழி உரங்களையும் தயாரித்து அளித்து வருகிறோம். இப்புதிய இடுபொருட்களைப் பயன்படுத்தி விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டும்.

"புது வழிகள் பிறக்கட்டும்...
புது வாழ்வு மலரட்டும்..."

ஆசிரியர், பண்ணைச் செய்தி

# ஸ்பிக் பண்ணைச் செய்தி

இரு மாத இதழ்


ஆசிரியர்
த.விஜயகுமார் டேவிட்

வெளியிடுபவர்
என். நாச்சியப்பன்

அச்சிடுபவர்
சித்ரகண்ணன் பிரசஸ்
சிவகாசி.

ஆலோசகர் குழு
எஸ். நாராயணன்
எஸ்.ரகுநாத ரெட்டி
வி.வெங்கடேஷ்
எஸ். பாஸ்கரன்



முகவரி :
ஸ்பிக் பண்ணை செய்தி,
ஸ்பிக் லிமிடெட்
முத்தையாபுரம்,
தூத்துக்குடி - 628 005
போன் : 0461 - 2356222
கைபேசி : 94433 25738, 94870 25738
e-mail : agriservices@greenstar.net.in


# உள்ளடக்கம் ...


| | |
|---|---|
| வளம் கொழிக்கட்டும் | 2 |
| பசுமைக்குடிலில் "மதுரை மல்லிகை" | 4 |
| மாதுளையில் கொள்ளை லாபம் | 8 |
| கோழிக்குத் தடுப்பூசி மாத்திரை | 9 |
| மல்லிகை பூக்க "பூம் பூம்" | 10 |
| ஸ்பிக் சுரபி இட்டதால் | 11 |
| உப்பு மண்ணிற்கும் ஏற்ற கொய்யா | 13 |
| ஸ்பிக் இடுபொருள் கண்காட்சி | 16 |
| பூச்சிகளை அழிக்கும் அக்னியாஸ்திரம் | 18 |
| கீழாநெல்லி | 22 |
| வாழையில் 2 லட்ச வருமானம் | 23 |
| ஆமணக்கு நொதிக் கரைசல் | 26 |
| பிரிஜ்வால் சம்பங்கி | 27 |
| கேள்வி பதில் | 29 |
| ஸ்பிக் ஜெயந்தி | 30 |
| வேளாண்பயிற்சி | 31 |


பசுமைக் குடிலில்
"மதுரை மல்லிகை"

"எதையுமே மற்றவர்கள் செய்வது போலச் செய்யாமல் வித்தியாசமாகச் செய்பவர்கள் தான் வெற்றி பெறுகிறார்கள். கம்ப்யூட்டர் மென் பொருள் பணியிலிருப்பவர்களில் தொழில் நுட்பத்தை வித்தியாசமாகச் சிந்தித்து செயல் படுத்தினவர்கள் தான் இன்று உலக அரங்கில் கோடீஸ்வரர்களாக வலம் வந்து கொண்டிருக் கிறார்கள். வேளாண்மையிலும் அப்படித்தான் புதுமையான படைப்பாளர்கள்தான் வித்தியாசமாகச் சிந்தித்து செயல்பட்டதால் வெற்றி பெற்றுள்ளனர்" என்று கூறுகிறார். மதுரை அழகர் கோயில் ரோட்டில் பசுமைக்குடில் அமைத்து "மதுரை மல்லிகை"ப் பயிர் செய்து வருகிற திரு.அருள் பிரகாசம், எம்.ஏ. (ஆங்கிலம்) பட்டதாரியாக இருந்தும் வேலை தேடித் திரியவில்லை. தன் தந்தையார் செய்து கொண்டிருந்த வேளாண்மையில் தொடர்ந்து முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்.



"கிருஷ்ணகிரி, ஓசூர் பகுதிகளில் ஏராளமான பசுமைகுடில்கள் அமைத்துப் பயிர் செய்து வருகிறார்கள். ஆனால் தென் தமிழ்நாட்டில் மதுரையைத் தாண்டி உள்ள ஊர்களில் இந்தத் தொழில்நுட்பம் பிரபலமாக வில்லை. அதற்குக் காரணம், தோட்டக்கலைத் துறையின் அணுகுமுறை தான் என்று சொல்ல வேண்டும். கிருஷ்ணகிரி, ஓசூர் மாவட்டங்களில் இயற்கையாகவே உள்ள சீதோஷ்ணநிலையில் காய்கறிப் பயிர்கள் சிறப்பாக பயிர் செய்ய முடியும். ஆகவே, அவர்களுக்கு பசுமைக் குடில் தேவைப்படுவதைக் காட்டிலும் வறட்சியான மழையில்லாத அதிக வெப்பமுள்ள தூத்துக்குடி இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்குத் தான் மிகவும் அவசியம். காரணம் என்ன வென்றால், பசுமைக் குடிலுக்குள் செயற்கையாக ஒரு துல்லிய சீதோஷ்ணநிலை மண்டலத்தை (Micro Climate) உருவாக்கி விடுகிறோம். மதுரை அருகிலுள்ள எங்கள் பகுதி வறண்ட பகுதி. என்னுடைய தோட்டத்தில் இரண்டு பசுமை குடில்கள் அமைத்தேன். ஒவ்வொன்றையும் 25 சென்ட் (1000 சதுரமீட்டர்) பரப்பில் அமைத்துள்ளேன். முதலில் இரண்டிலும் வெள்ளரிக்காய்தான் பயிர் செய்து வந்தேன். நல்ல லாபம் கிடைத்தது. பின்பு மதுரை மல்லிகை பயிரிடும் ஆசை என்னை வெகுவாகக் கவர்ந்தது. பிறகு ஒரு பசுமைக்குடிலில் வெள்ளரிக்காயும் (Cucumber) மற்றொன்றில் மதுரை மல்லிகையும் பயிர் செய்ய ஆரம்பித்தேன். உங்கள் எல்லோருக்கும் தெரியும் மதுரை மல்லிகை மிகவும் பிரபலமானது என்று. பிரச்சினை என்னவென்றால் திறந்த வெளியில் மல்லிகையைப் பயிர் செய்யும் பொழுது குளிர்காலமான அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரை மல்லிகை அதிகமாகப் பூப்பதில்லை. பாருங்கள், பனிக்காலத்தில் திறந்த வெளியில் ஒரு சென்ட் நிலத்தில் 10 கிராம் கூட பூ வராது. பூக்களும் சிறியதாக இருக்கும். ஆனால் விற்பனை விலையை ஒப்பிட்டுப் பார்த்தால் மற்ற

நேரங்களில் சராசரியாக ஒரு கிலோ ரூ.200 முதல் 500 வரை விற்கக்கூடிய மதுரை மல்லிகை நவம்பர் - டிசம்பர் மாதங்களில் ஒரு கிலோ ரூ.1500 முதல் ரூ.2000 வரை விற்பனையாகும். அப்படியென்றால் அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரையிலான 3 - 4 மாதங்களில் மல்லிகை பூக்களை பூக்க வைத்தால் ஒரு வருடத்தில் கிடைக்கும் லாபத்தை நான்கே மாதங்களில் பெற்றுக் கொள்ளலாம்."

"ஏன் மதுரை மல்லிகையைப் பசுமைக் குடிலில் வளர்க்க கூடாது? வளர்த்தால், நவம்பர் - டிசம்பர் மாதங்களிலும் பூக்க வைக்கலாமே!! சிந்தித்தேன் !! செயல்பட்டேன் !! யோசனை தோன்றியவுடன் ஒரு மாதிரிக்காக பசுமைக்குடிலில் 25 சென்ட்டில் பயிர் செய்தேன். என்னிடம் உள்ள இரண்டு பசுமைக்குடில்களில் ஒரு பசுமைக்குடிலை மல்லிகைக்கென்று பிரித்தெடுத்தேன்."



"பொதுவாக வெள்ளரி, தக்காளி பயிர் செய்யும் பொழுது வளர்ப்புப் பைகளில் அதாவது குரோ பேக்குகளில் (Grow Bag) பயிர் செய்வேன். பெரியகுளம் அருகே உள்ள கும்பக்கரை என்ற ஊரில் குரோபேக்குகளும் அதற்குள் இட வேண்டிய தென்னை நார் வில்லைகளும் கிடைக்கின்றன. வெள்ளரிக்கு 1 மீட்டர் நீளம் 9 இஞ்ச் அகலம் 5 இஞ்ச் உயரம் உள்ள வளர்ப்பு பைகள் தேவை. அதே வளர்ப்புப் பைகளின் உயரம் தக்காளிக்கு 8 இஞ்ச் ஆகவும், கேப்ஸிகம் பயிர் செய்ய 9 இஞ்ச் ஆகவும் இருக்க வேண்டும். ஆனால் மல்லிகைப் பயிரை அவ்வாறு வளர்ப்புப் பையில் வளர்க்க முடியாது. ஏனெனில் மல்லிகைச் செடிகள் எந்த அளவுக்குப் படருகின்றதோ அந்த அளவுக்கு வேர்களும் படர்ந்து செல்லும். ஆகவே வளர்ப்புப் பைகள் இல்லாமல் தரையிலேயே வளர்க்கத் திட்டமிட்டேன். என்னுடைய மண் ஈளக் களிமண் என்பதாலும் பக்கத்திலேயே ஏரிக்கண்மாய் இருப்பதாலும் வருடத்தில் 6 மாதம் வரை தண்ணீர் ஊற்று எடுக்கும் என்னுடைய மண் மல்லிகைகக்குச் சரியில்லாததால், JCB வைத்து $1\frac{1}{2}$ அடி ஆழம் வரைத் தோண்டி அப்புறப்படுத்தி விட்டு சுமார் 2 அடி உயரத்திற்கு நல்ல செம்மண் அடித்து மண்ணை தரைமட்டத்திலிருந்து உயர்த்தினேன். பொதுவாகத் திறந்த வெளியில் மல்லிகைப் பயிர் செய்பவர்கள் $2\frac{1}{2}$ அடி x $2\frac{1}{2}$அடி இடைவெளி விட்டு நடுவார்கள். நான் 5 அடி இடைவெளியில் 4 அடி அகலத்தில் பார்கள் அமைத்துக் கொண்டேன். இராமேஸ்வரம் தங்கச்சிமடத்தில் மதுரை மல்லிகை நாற்றுக்களை ஒரு நாற்று ரூ.3 என்ற விலைக்கு வாங்கி வந்தேன். 25 சென்ட் நட 470 நாற்றுக்கள் தேவைப்பட்டன. பாரின் இரண்டு புறங்களிலும் மல்லிகை நாற்றுக்களை நட்டு இரண்டு வரிசையாக சொட்டுநீர்க் குழாய்களை, ஒவ்வொரு சொட்டுவானும் ஒரு மணி நேரத்தில் 8 லிட்டர் சொட்டுமாறு அமைத்துக் கொண்டேன்."

"மல்லிகைக்கு வெப்பம் அவசியம் என்பதால், பசுமைக் குடிலுக்குள் பனித்தூறல் தெளிப்பான் (Fogger) அமைக்கவில்லை. நட்டபின், சொட்டு நீர் மூலம் முதல் தண்ணீர் விட்டவுடன் செடிகள் விறுவிறுப்பாக வளர ஆரம்பித்தன. திறந்த வெளியில் 12 - 14 மாதங்களில் வளரக் கூடிய வளர்ச்சி, பசுமைக்குடிலுக்குள் 7 மாதங்களில் என்னுடைய




செடிகளுக்குக் கிடைத்துவிட்டது. திறந்த வெளியில் நடவு நட்டு ஒரு வருஷம் கழித்துத் தான் பூக்க ஆரம்பிக்கும் என்னுடைய பசுமைக் குடிலில் 5 ஆவது மாதத்தில் பூக்க ஆரம்பித்துவிட்டது. 25 சென்ட்டில் முதல் பறிப்பாக 1.7 கிலோ (1700 கிராம்) பூப்பறித்தேன்."

"சந்தைக்குப் பூக்களை எடுத்துச் சென்றபோது மற்ற பூக்கள் 1 கிலோ ரூ.1500க்கு விற்றபோது என்னுடைய பூக்கள் திறட்சியாகவும் நல்ல வெண்மை நிறத்துடனும் இருந்ததால் $1\frac{1}{2}$ கிலோ ரூ.1800க்கு விற்பனையானது. அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை $1\frac{1}{2}$ கிலோ பூவுக்கு ரூ.1500 முதல் 2000 வரை கிடைத்தது. உச்சகட்டமாகக் நவம்பர் மாதத்தில் மட்டும் 1 கிலோ பூ ரூபாய் 2000க்கு விற்றது. தற்போது என்னுடைய பசுமைக் குடிலில் மதுரை மல்லிகை 7 மாத இளஞ்செடியாக இருப்பதால், சராசரியாக ஒரு நாள் பறிப்புக்கு 1 கிலோ பூ கிடைக்கிறது. காலையில் பூ பறித்துவிடுவோம். தினமும் பறிப்போம். ஒவ்வொரு நாளும் 1 1/2 கிலோ கணக்கில் ஆக ஒரு மாதத்தில் ரூ.22,500 வருமானம் கிடைக்கிறது. இந்தச் செடிகள் ஒன்றரை வருடங்களைத் தாண்டும் பொழுது செடிகள் நன்கு அடர்த்தியாக வளர்ந்துவிடும். அந்தத் தருணத்தில் ஒரு பறிப்புக்கு 5 முதல் 7 கிலோ வரை பூ கிடைக்குமென எதிர்பார்க்கிறோம். அப்படிக் கிடைத்தால் சராசரி 1 கிலோ ரூ.500 என்ற விலையில் ஒரு மாதத்தில் 75,000மும் ஒரு வருடத்தில் ரூபாய் 9 லட்சமும் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. மதுரை மல்லிகையைப் பயிர் செய்யும்போது முக்கியமான செலவு பூ பறிப்புக்கான ஆள் கூலி தான். பூக்களை அதிகாலையில் பறித்து எவ்வளவு சீக்கிரமாகச் சந்தைக்கு எடுத்துச் சென்று சேர்க்கிறோமோ அந்த அளவுக்கு நல்ல விலை கிடைக்கும். மல்லிகைக்கு வெளிச்சம் அவசியம். இரவு நேரங்களிலும் வெளிச்சம் கிடைத்தால் வளர்ச்சியும் பூ மகசூலும் அதிகரிக்கும். ஆகவே சோலார் விளக்குகள் அமைக்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன். பசுமைக் குடிலில் பூச்சி நோய்த் தாக்குதல் அதிகம் இருப்பதில்லை. மொக்குப் புழுத் தாக்குதலை கட்டுப்படுத்தக் குளோரிபைரிபாஸ் போன்ற பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துகிறேன்."

"வேளாண் தொழிலில் படித்தவர்கள் குறைவாக இருப்பதால் பாரம்பரியமாக விவசாயம் செய்பவர்கள் இலவசத்துக்கு ஆசைப்பட்டு அதிகாரிகளுக்கு வணக்கம் சொல்லியே பழகிப் போனார்கள். இலவசங்களைக் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொள்ளும் அரசும், அதிகாரிகளும் இடைத்தரகர்களை ஒழிக்க முன் வருவதில்லை. இலவச மின்சாரம், மானியத்தில் உரம், மானியத்தில் வேளாண் கருவிகள் என்று கொடுத்து விவசாயியின் பார்வையைத் திசைத் திருப்பி விளையும்



பொருட்களின் விலையைக் குறைத்து வாங்கி கொள்கிறார்கள். மொத்தத்தில் விவசாயியைத் தவிர அரசியல்வாதிகள், அதிகாரிகள், ஏன் பொதுமக்களும் கூட அதாவது விவசாயியைச் சுற்றியுள்ள அனைவரும் பயன் அடைந்துக் கொள்கிறார்களே தவிர விவசாயி பயன் அடைந்தபாடில்லை. என்னுடைய ஆவல் என்னவென்றால், அடிப்படையாக விவசாயத்தில் மானியங்கள் இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் விளை பொருட்களுக்கு லாபகரமான விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் விவசாயி கையேந்தி நிற்கும் நிலையும் ஏற்படாது, கடன்பட்டு தற்கொலை செய்யும் அவல நிலையும் நின்று போகும். ஒரு தொழிற்சாலை லாபநிலையில் இயங்குவது போல நாங்களும் இயங்கலாம்.





ஒரு பொருள் விளம்பரத்தால் மட்டும் வியாபாரமாவதில்லை. அதிக அளவில் விளம்பரம் செய்யும் சில நிறுவனங்களின் பொருட்கள் ஆரம்பத்தில் கொஞ்ச காலம் ஒருவேளை அதிவேக விற்பனையாகும். வாடிக்கையாளர்கள் வாங்கி உபயோகித்த பிறகு தரம் சரியில்லை என்றால் விற்பனை குறைந்து விடும். ஒரு பொருள் சந்தையில் நிரந்தரமாக நன்கு விற்பனையாவதற்கு தரம் ஒன்றுத் தான் அடிப்படை ஆதாரம்.




அந்த அடிப்படையில் தான் ஸ்பிக் சுரபி என்ற தலைசிறந்த இயற்கை உரம் உருவாக்கப் பட்டது. ஸ்பிக் சுரபி தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்களிலும் பிரபலமாக ஆரம்பித்து விட்டது. குறிப்பாக ஆந்திரா, கர்நாடகா, கேரளா மாநில விவசாயிகள் ஸ்பிக் சுரபியை விரும்பி உபயோகிக்கிறார்கள். புண்ணாக்கு தொன்றுதொட்டு மண்ணுக்கு இடப்பட்டு வருகிற அருமையான இயற்கை உரம். புண்ணாக்கில் புரதச்சத்து அதிக இருப்பதால் மண்ணில் மக்கி தழைச்சத்தாகி பயிருக்கு நன்மைச் செய்கிறது. மேலும் புண்ணாக்கு இடப்படுகிற மண்ணில் நுண்ணுயிர்களின் வளர்ச்சி அபரிமிதமாகக் காணப்படும். ஸ்பிக் சுரபியில் முழுதும் புண்ணாக்கு அடங்கியுள்ளது.

கர்நாடக மாநிலம் ஹோஸதுர்கா கிராமத்து விவசாயி ராஜு என்பர் $3\frac{1}{2}$ ஏக்கரில் மாதுளை பயிர் செய்துள்ளார். ஒவ்வொரு மாதுளை செடிக்கும் ஒரு கிலோ ஸ்பிக் சுரபி இட்டதில் மாதுளை நன்கு வேர் பிடித்து செடி செழித்து வளர்ந்து, பழங்கள் நல்ல எடையுடன் தரமானதாயும் பார்ப்பதற்கு அழகாக பளபளப்பாக இருந்தது. ஒவ்வொரு மாதுளையும் சுமார் 350 கிராம் இருந்ததால் ஒவ்வொரு மாதுளை செடியிலிருந்து 45 கிலோ மகசூல் கிடைத்ததாம். பழங்கள் தரமாக இருந்ததால் ஒரு கிலோ மாதுளைக்கு ரூ.95 வரை விலை கிடைத்துள்ளது. $3\frac{1}{2}$ ஏக்கர் மாதுளை பயிர் செய்திருந்தார். அதிலிருந்து மொத்தத்தில் ரூ.38.5 லட்சம் வருமானம் பெற்றதாக மார்தட்டிக் கொள்கிறார். மற்ற விவசாயிகளும் ஸ்பிக் சுரபி இட்டு பலன் அடையும்படி கேட்டுக் கொள்கிறார்.





# கோழிக்கு தடுப்பூசி மாத்திரை

Dr.K.குமாரவேல் மற்றும் Dr.K.தேவகி
வேளாண்மைஅறிவியல் நிலையம்,
காட்டுப்பாக்கம்.

கோழிகளைத் தாக்கும் கொடிய நோய்களில் இராணிக்கெட் நோய் முதன்மையானது ஆகும். இக்கொடிய நோய் ஏவியன் பாராமிக்ஸோ வைரஸ் என்ற நச்சுயிரியினால் உண்டாகிறது. இது கோழிகளில் கழிச்சல் மற்றும் சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தி அதிக கோழிகள் இறந்து விடுகிறதற்கு ஏதுவாகிறது.



தற்போது கோழி வளர்ப்பு வியாபார ரீதியில் நன்கு வளர்ச்சி அடைந்து வருகிறது. எனவே பெரிய கோழிப் பண்ணையாளர்கள் தேவையானத் தடுப்பூசிகளை முறையாக அளித்து இந்த நோயிலிருந்து தங்கள் கோழிகளைக் காப்பாற்றி விடுகின்றனர். ஆனால் புறக்கடையில் கோழிகளை வளர்ப்போர் தங்கள் கோழிகளுக்கு முறையான தடுப்பூசிகள் அளிப்பதில்லை. இதற்கு சமூகம், பொருளாதாரம், மருத்துவ வசதியின்மைபோன்ற பல காரணங்கள் இருக்கலாம். எதுவாக இருந்தாலும், புறக்கடை கோழிகளில் முறையான தடுப்பூசி அளிக்கப்படாததால், இந்நோய்க் கிருமிகள் புறக்கடை கோழியினங்களைத் தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்துவதோடு, மற்ற கோழிகளுக்கும் இந்நோய்க் கிருமிகளை பரப்புகிறது. எனவே வெள்ளைக் கழிச்சல் நோய்க் கிருமிகள் கிராமங்களில் புறக்கடைகளில் வளர்க்கப்படும் கோழிகளின் இறப்பைத் தடுக்கவும், பண்ணைக் கோழிகளுக்கும் இந்நோய் தொற்றிக் கொள்ளாமல் தவிர்க்கவும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மூலம் இராணிக்கெட் நோய் தடுப்புக்காக வாய்வழி குருணை வடிவான மருந்து ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குருணை மருந்தினை கோழிகளுக்கு வீட்டிலுள்ளவர்களே எளிதில் அளித்து விடலாம்.

இதை மூன்று முறையில் அளிக்கலாம்.

1. கோழிகளுக்கு வாயில் ஒன்று அல்லது இரண்டு குருணை வடிவான தடுப்பூசி மருந்தினை அளிக்க வேண்டும்.
2. காலை அல்லது மாலை வேளைகளில், செய்தித் தாளைத் தரையில் விரித்து அதன் மேல் குருணை மருந்தினைத் தூவி விட்டு கோழிகளை உண்ணச் செய்யலாம்.
3. கோழிகளுக்கு அளிக்கப்படும் அடர் தீவனத்தில் கலந்தளிக்கலாம். குருணைத் தீவனம் கோழிகளுக்கு அளிக்கும்போது, ஒரு கோழிக்கு 1-2 குருணைகள் என்ற விகிதத்தில் அளிக்க வேண்டும். இரண்டுக்கு மேற்பட்ட குருணைகளை கோழிகள் எடுத்துக் கொண்டாலும் அது கோழிகளுக்குத் தீங்கு செய்யாது. இவ்வாறு வாய்வழியாக குருணைத் தடுப்பூசி மருந்துகளைக் கோழிகளுக்கு அளித்து இராணிக்கெட்

நோயிலிருந்து கோழிகளைக் காப்பாற்றி இறப்பு சதவிகிதத்தைக் கணிசமாக குறைத்து அதிக உற்பத்தித் திறனை பெற்றுப் பயனடையலாம்.

**கோழிகளுக்கு அளிக்கும் தருணம் :**

- கோழிக்குஞ்சுகள் பொரித்த 10 நாளில் அவைகளுக்கு இந்தக் குருணைத் தடுப்பூசி மருந்தினை (1-2 குருணைகள்) முதல் தடவையாகவும், பின்னர் 8 வது வாரம் ஒரு முறையும், 16வது வாரம் ஒரு முறையும் கொடுக்க வேண்டும்.
- அளிப்பதன் மூலம் கோழிகளில் இறப்ப சதவிகிதத்தை கணிசமாகக் குறைக்கலாம்.

**தடுப்பூசி மாத்திரையால் பயன்கள் :**

- விவசாயிகளுக்கு இத்தொழில்நுட்பம் மூலமாக கோழிகளுக்குத் தடுப்பூசி அளிக்கும் சிரமம் குறைவு.
- கோழிகளுக்கு இராணிக்கெட் தடுப்பூசி அளிக்க கால்நடை மருத்துவமனைக்குக் கோழிகளை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை.
- குருணைத் தடுப்பூசி மருந்தை வீட்டிலுள்ளவர்களே கோழிகளுக்கு அளித்திடலாம்.
- குறைந்த செலவு.
- நேரம் மிச்சம் மற்றும் வேலையாட்கள் தேவையில்லை.
- கோழிகளில் இறப்பு சதவிகிதம் குறைக்கப் படுகின்றது.




மல்லிகை பயிரிடும் விவசாயிகள் பலர், தொடர்ந்து 15 ஆண்டுகள் கூட அழிக்காமல் ஒரே நிலத்தில் பயிர் செய்து வருகின்றனர். அந்தச் சூழ்நிலையில், தேவையான ஊட்டச்சத்துக்களை அளிக்காவிடில் பூத்தல் குறைய ஆரம்பித்துவிடும். ஒவ்வொரு வருடமும் மல்லிகையில் ஒரு செடிக்கு 10 கிலோ மக்கிய தொழுவுரத்துடன் 130 கிராம் டி.ஏ.பி.15 கிராம் யூரியா, 100 கிராம் பொட்டாஷ் இட வேண்டும். இவ்வாறு நவம்பர் மாதம் ஒரு முறையும் ஜூலை மாதம் ஒரு முறையும் இடவும். இலைகள் வெளிறிக் காணப்பட்டால் ஒரு லிட்டர் நீரில் 2.5 கிராம் சிங்க் சல்பேட், 5 கிராம் மக்னீசியம் சல்பேட், 5 கிராம் பெரர்ரஸ் சல்பேட் என்ற அளவில் கரைத்துத் தெளிக்க வேண்டும். இவ்வாறு 15 நாட்களுக்கு ஒரு முறை 2 - 3 முறை இலைகள் மறுபடி பச்சையாகும் வரை தெளிக்கவும்.

பூம்ஃபிளவர் என்பது நைட்ரோபென்சீன் என்ற நைட்ரஜனை அடக்கிய மலர்களைத் தூண்டக்கூடிய ஒரு வளர்ச்சி ஊக்கி, திரவ வடிவில் கிடைக்கிறது. எல்லா மலர்பயிர்களுக்கு அடிக்க ஏற்றது. குறிப்பாக



மல்லிகையில் பூ பூத்தல் அதிகரிக்க உதவுகிறது. இதை அடித்தவுடன் சுலபமாக இலைகள் இம்மருந்தை உறிந்து கொண்டு மண்ணிலுள்ள சத்துக்களை மலர்செடிகள் அதிக அளவில் இழுத்து செழித்து வளர உதவுகிறது. மல்லிகையில் மாதத்திற்கு ஒரு முறை 2 மில்லி பூம்ஃபிளவர் மருந்தை 1 லிட்டர் நீரில் கரைத்து அடிக்கலாம். காலை அல்லது மாலை வேளையில் செடி முழுவதும் நனையுமாறு கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். மற்ற பூச்சி நோய் மருந்துகளுடன் கலந்து தெளிக்க ஏற்றது. ஆனால் தாமிரம், கந்தகம், சுண்ணாம்பு ஆகியன அடங்கிய மருந்துகளுடன் ஒரு போதும் கலக்கக் கூடாது. இது 100 மில்லி, 250 மில்லி, 1 லிட்டர் மற்றும் 5 லிட்டர் பேக்கிங்குகளில் கிடைக்கிறது. வாங்கி உபயோகியுங்கள் பாருங்களேன்.

# ஸ்பிக் சுரபி இட்டதால்...




ப.விஜயரங்கன், ரெங்கப்ப நாயக்கர்பட்டி
ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம் – 626126.
செல் : 9444788004

காமராஜர் மாவட்டம், ரெங்கப்பநாயக்கர் பட்டி கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி. திரு. விஜயரங்கன் கடந்த இருபது ஆண்டுகளாக விவசாயத்தை முழு நேரத் தொழிலாக செய்து வருகின்றார். இவர் விவசாயத்தில் எந்த ஒரு புதிய தொழில் நுட்பம் மற்றும் புதிய வேளாண் இடுபொருட்கள் வந்தாலும் உடனே வாங்கிப் பயன்படுத்துவார். இவருக்குக் கொய்யா பிரதான பயிர். ஆனால் இவரது பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக மழை குறைவு காரணமாக தண்ணீர்த் தட்டுப்பாடு வந்துவிட்டது. எனவே இவர் சாகுபடி செய்யும் அனைத்துப் பயிர்களுக்கும் சொட்டு நீர் மற்றும் தெளிப்புநீர் பாசனத்தை பயன்படுத்துகின்றார். இவர் ஸ்பிக் நிறுவனத்தில் இருந்து விற்பனை செய்யும் "ஸ்பிக் சுரபி" இயற்கை உரத்தை சம்பங்கி மலர் மற்றும் மிளகாய் பயிருக்கு உபயோகித்து பயன் அடைந்துள்ளார்.

"எனக்குச் சொந்தமாக 8 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 5 ஏக்கரில் கொய்யாவும் மற்ற இடங்களில் சம்பங்கி மற்றும் காய்கறி சாகுபடி செய்து வருகின்றேன். கடந்த 20 ஆண்டுகளாக ஸ்பிக் கம்பெனியில் இருந்து வெளிவரும் பண்ணைச் செய்தி மலரைத் தொடர்ந்து படித்து பயனடைந்து வருகிறேன். அநேக தொழில் நுட்பங்களையும், ஸ்பிக் இடுபொருட்கள் பற்றியும் பண்ணைச் செய்தி மூலம் தெரிந்து கொள்வேன்."

"இரசாயன உரத்தை மட்டுமின்றி இயற்கை உரத்திற்கும் நான் அதிக முக்கியத்துவம் கொடுப்பேன். இயற்கை உரத்துடன்



சேர்த்துதான் இராசயன உரத்தை இடுவேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக பிரிஜ்வால் என்ற வீரிய ஒட்டுரக சம்பங்கி 3/4 ஏக்கரில் சாகுபடி செய்தேன். 3/4 ஏக்கருக்கு 300 கிலோ சம்பங்கி விதைக் கிழங்கு பயன்படுத்தினேன். அடியுரமாக 3/4 ஏக்கருக்கு ஸ்பிக் சுரபி 50 கிலோ இட்டேன். ஸ்பிக் சுரபி உரத்தைப் பற்றி ஸ்பிக் பண்ணைச் செய்தி மூலம்தான் தெரிந்து கொண்டேன். இத்துடன் மக்கிய தொழுஉரம் இரண்டு டிராக்டர் லோடு அடித்தேன். உரங்கள் இட்டு உழவு செய்த பின்பு நிலத்தை சமன்படுத்தி $2\frac{1}{2}$ அடி இடைவெளியில் பார் போட்டு பாரின் இரு ஓரங்களிலும் $2\frac{1}{2}$ அடி இடைவெளியில் முக்கோண வடிவில் விதைக் கிழங்கினை ஊன்றினேன். மேலுரமாக நடவு செய்த 6வது மாதத்தில் இருந்து மாதம் ஒருமுறை ஸ்பிக் சுரபி 1 மூடை, ஸ்பிக் டிஏபி $\frac{1}{2}$ மூடை மற்றும் கடலைப் புண்ணாக்கு 20 கிலோ வீதம் இட்டேன். நடவு செய்த 6வது மாதத்தில் முதல் அறுவடை வந்தது. 8வது மாதத்தில் இருந்து இரண்டு ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக தினசரி 15 கிலோ வரை சம்பங்கிப் பூக்கள் கிடைத்தன. சம்பங்கிக்கு ஸ்பிக் சுரபி இட்டதால் கீழ்கண்ட பலன்களைக் கண் கூடாகத் தெரிந்து கொண்டேன்.

1. கிழங்கு அழுகல் நோய் வரவில்லை.
2. மண்வளம் நன்றாக இருந்தது.
3. செடி வாளிப்பாகக் கிளிப்பச்சை நிறத்தில் இருந்தது.
4. பூ பூக்கும் தண்டு பருமனாக இருந்தது.
5. பூக்கள் பெரியதாகவும் எடை கூடுதலாகவும் இருந்தது.
6. பூ தொடர்ச்சியாக குறையாமல் வந்து கொண்டிருந்தது.
7. இராசாயன உரத்துடன் ஸ்பிக் சுரபி மற்றும் இயற்கை உரங்கள் கலந்து இட்டதால் மகசூல் ஏற்ற இறக்கம் இல்லாமல் பூக்கள் தொடர்ந்து கிடைத்தது. இதனால் முகூர்த்த நேரங்களில் நல்லவிலை கிடைத்தது.
8. ஸ்பிக் சுரபி மற்றும் இயற்கை உரங்கள் இட்ட நிலத்தில் இருந்து நடவுக்கு எடுத்த விதைக் கிழங்கு 40 நாட்கள் சென்றாலும் கெட்டுப் போகாமல் தரமாக இருந்தது.

சம்பங்கி இரண்டு ஆண்டுகள் வரை நல்ல மகசூல் கிடைக்கும், பின்பு மகசூல் குறைந்து விடும். நான் தற்போது புதியதாக ஒரு ஏக்கரில் சம்பங்கி நடவு செய்ய முன்பு சம்பங்கி சாகுபடி செய்த இடத்தில் இருந்து விதைக்கிழங்கு எடுத்து வைத்துள்ளேன். விதைக் கிழங்கை மற்ற விவசாயிகளுக்கும் விற்பனை செய்து வருகின்றேன்."

"சம்பங்கியில் எனக்குக் கிடைத்த அனுபவத்தைத் தொடர்ந்து, ஒரு ஏக்கரில் காய் மிளகாய் சாகுபடி செய்துள்ளேன். மிளகாய் நடவு செய்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகி விட்டது. மிளகாய்க்கு அடியுரமாக 40 கிலோ ஸ்பிக் சுரபி மற்றும் 50 கிலோ ஸ்பிக் டிஏபி இட்டுள்ளேன். மேலுரமாக ஸ்பிக் சுரபி 20 கிலோ, ஸ்பிக் 20:20:0:13 காம்ப்ளக்ஸ் 20 கிலோ இரண்டையும் கலந்து இட்டுள்ளேன். தற்போது மிளகாய்ச் செடி காய்பிடிக்கும் தருணத்தில் உள்ளது. செடி நன்றாக உள்ளது. செடி வளர வளர உரத்தின் அளவைக் கூட்டி இட நினைத்துள்ளேன். நான் என்னைப் போன்ற விவசாயிகளுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் ஸ்பிக் நிறுவனம் வெறும் இராசாயன உரங்கள் மட்டும் தயாரித்து அளிக்காமல் தரமான ஸ்பிக் சுரபி போன்ற இயற்கை உரங்களையும் தயாரித்து அளித்து வருகிறது. வாங்கி பயனடையுங்கள்.





# உப்பு மண்ணிற்கும் கொய்யா ஏற்றது

Dr.M.I.மணிவண்ணன்
வேளாண்மைஅறிவியல் நிலையம்,
திருப்பதிசாரம், கன்னியாகுமரி மாவட்டம்.

கொய்யா ஒரு கடினமான பழப்பயிராகும். ஏனெனில், உப்பு அதிகம் நிறைந்த மண்ணிலும் நீர் வடிகால் வசதி குறைவான பகுதியிலும் இது வளரும் தன்மைகொண்டது. மேலும், உரம் மற்றும் நீர்ப்பாசனம் இல்லாத நிலையிலும் இது விளைச்சல் தர வல்லது. மண்ணின் கார அமில தன்மை 4.5 முதல் 8.5 வரை உள்ள பகுதிகளில் கொய்யாவினைச் சாகுபடி செய்யலாம். நல்ல தரமான மகசூலுக்கு வரையறுக்கப்பட்ட குளிர்காலம் அவசியமாகும். ஏனெனில், இது ஒரு வெப்ப மற்றும் மிதவெப்ப மண்டல பழப் பயிராகும். ஏனெனில், கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 மீட்டர் வரை சிறப்பாக வளரக்கூடிய இப்பழப்பயிர் குளிர்ந்த சீதோஷ்ண நிலையை விரும்பக்கூடியது. மித மானாவாரிப் பயிராகக் கருதப்படும் கொய்யாவினை பனி நிறைந்த பகுதிகளில் சாகுபடி செய்ய முடியாது. தமிழ்நாட்டில் கோயமுத்தூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பயிர் செய்ய ஏற்றது.

இதற்கு ஏழையின் ஆப்பிள் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. கொய்யா பழங்களில் வைட்டமின் 'சி' சத்து அதிக அளவில் நிறைந்துள்ளது. 100 கிராம் சதைப்பற்றுக்கு 100 மில்லிகிராம் முதல் 260 மில்லிகிராம் வரை வைட்டமின் 'சி' சத்து காணப்படுகிறது. சுண்ணாம்புச் சத்தும் மிதமான அளவில் உள்ளது. கொய்யா பழங்களிலிருந்து ஜெல்லி தயார் செய்யலாம். பதப்படுத்தப்பட்ட நிலையில் வைட்டமின் 'சி' சத்து தக்க வைக்கப்படுகின்றது.

## கொய்யாவில் முக்கிய இரகங்கள்

**அலாகாபாத் சஃபேதா :** அடர்த்தியான இலைகளையும், மிகுந்த பக்க கிளைகளையும் கொண்ட வீரியமுள்ள மரம், பழங்கள் வட்டமான வடிவத்தில் காணப்படும். பழத்தின் எடை 90-150 கிராம் இருக்கும். உத்திரபிரதேச மாநிலத்தின் மிக பிரபலமான இரகமாகிய இதன் தோல் பளபளப்பாகவும், சதைப்பற்று வெள்ளை நிறத்திலும் காணப்படும். இப்பழத்தின் சாற்றில் மொத்த கரையும் பொருட்களின் (TDS) அளவு 9.5° பிரிக்ஸ் ஆகும். 150 கிராம் எடையுள்ள சதைப்பற்றில் வைட்டமின் 'சி' யின் அளவு 140 மில்லிகிராம் ஆகும்.

**லக்னோ - 49;** சர்தார் என்றழைக்கப்படும் இந்த இரகத்தின் பழங்கள் 90 - 140 கிராம் எடை கொண்டிருக்கும். வட்டம் மற்றும் முட்டை வடிவத்துடன் காணப்படும். இப்பழத்தின் மொத்த கரையும் பொருட்களின் (TDS) அளவு 9.5° பிரிக்ஸ் ஆகும். 150 கிராம் சதைப்பற்றில் 130 மில்லிகிராம் வைட்டமின் 'சி' சத்து





நிறைந்திருக்கும்.

நாக்பூர் சீட்லெஸ் : நடுத்தர அளவினை கொண்ட பழங்கள், 70-80 கிராம் எடை கொண்டதாயிருக்கும். நல்ல மணமும் சுவையும் கொண்ட இப்பழங்கள் வெள்ளை நிற சதைப்பற்றுடன் காணப்படும்.

ரெட் ஃபிளஸ்ச் : நடுத்தரமான வைப்புத்திறனைக் கொண்ட இப்பழங்கள் வட்டமாகவும் முட்டை வடிவத்துடனும் காணப்படும். சதைப்பற்று பிங்க் நிறத்தில் இருக்கும். தோலின் மேற்புரம் குங்குமம் மற்றும் மஞ்சள் நிறம் கலந்து காணப்படும்.

சீட்லெஸ் : பழத்தின் சதைப்பற்று தடிமனாகவும், க்ரிம் கலந்த வெள்ளை நிறத்திலும் இருக்கும். மேலும், நீள்வட்டம் வடிவம் கொண்டதாயிருக்கும்.

இனப்பெருக்கம் : விதையின் மூலமாக கொய்யா இனப்பெருக்கம் செய்தால் காய்ப்பதற்கு அதிக வருடங்கள் எடுத்துக் கொள்கின்றது. பதியம் போடுதல் கொய்யா இனப்பெருக்கத்திற்கு சிறந்த முறையாக கருதப்படுகின்றது. விண்பதியம் மற்றும் சாதா பதியமுறைகள் போடலாம். இனப்பெருக்கத்திற்கு தண்டுக்குச்சியையும் பயன்படுத்தலாம். வளர்ச்சி ஊக்கிகளான பியுட்ரிக் அமிலம் (BA) மற்றும் நாப்தலின் அசிடிக் அமிலம் (NAA) ஆகியவற்றை முறையே 2000 பிபிஎம் மற்றும் 5000 பிபிஎம் அளவுகளில் தயார் செய்து, மென்தண்டு குச்சியை அவற்றில் நனைத்து, பனிப்புகை கூடாரங்களில் வைத்து வேரின் வளர்ச்சியை அதிகப்படுத்தலாம். லக்னோவில் அமைந்துள்ள மத்திய மித வெப்ப மண்டலத்துக்கான தோட்டக்கலை நிலையத்தில் 'wedge' என்னும் ஒட்டுமுறையை மிக வேகமாக உற்பத்தி செய்ய கண்டுபிடித்துள்ளனர்.

உயர் அடர்வு நடவு முறை : 0.5மீ X 0.5மீ X 0.5மீ என்ற அளவில் குழி எடுத்து, பாலிதீனிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கன்றுகளின் வேர்களைச் சுற்றியுள்ள மண் உதிராத வண்ணம் அப்படியே குழியின் நடுவில் வைத்து நடவு செய்ய வேண்டும். அடர்நடவு முறையில், 3.0 மீட்டர் X 6.0 மீட்டர் என்ற இடைவெளி விட்டு ஒரு ஹெக்டர் நிலப்பரப்பில் 555 செடிகளை நடவு செய்யலாம். உயர் அடர்வு நடவு முறையில் 1.0மீட்டர் X 2.0 மீட்டர் என்ற இடைவெளி விட்டு செடிகளை நடவு செய்வதன் மூலம் ஒரு ஹெக்டருக்கு 5000 கொய்யா கன்றுகளை உள்ளடக்கலாம்.

உர நிர்வாகம் : காய்க்கும் மரங்களுக்கு ஒரு மரத்திற்கு 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் ஒரு கிலோ தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து இவற்றை இரு பாகங்களாக மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில் கொடுக்க வேண்டும். மரத்தின் பிரதான தண்டிலிருந்து 15 செ.மீ. தள்ளி சுற்றிலும் லேசாகக் கொத்தி உரத்தைப் பரப்பி இட வேண்டும். இலைவழி உரமாக மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில்





வருடத்திற்கு இருமுறை யூரியா 0.5% + சிங்க் சல்பேட் 0.5% கொடுத்து மகசூலை அதிகரிக்கலாம். சில நேரங்களில், கொய்யாவில் நுண்ணூட்டச் சத்து குறைபாடு காணப்படும். ஆகையால், நுண்ணூட்டச் சத்து கலவையாக, சிங்க் சல்ஃபேட், மக்னீசியம் சல்ஃபேட், மாங்கனீசு சல்ஃபேட் இரும்பு சல்பேட் இவற்றைக் கலந்து வளர்ச்சியின் வெவ்வேறு பருவங்களில் தெளிக்கலாம். அதாவது, இலை தோன்றும் பருவத்திலும் ஒரு மாதம் கழித்து பூ பூக்கும் பருவத்திலும் காய்ப்பிடிக்கும் பருவத்திலும் தெளித்தால் நல்ல தரத்தோடு அதிக மகசூலை பெறலாம்.

**நீர் மேலாண்மை:** கொய்யா வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. எனினும், 10 அல்லது 15 நாள் இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்வதன் மூலம் நல்ல பயன் பெறலாம். சொட்டுநீர்ப் பாசனம் செய்தால் நல்லதரமான மகசூல் பெற முடியும்.

**கவாத்து செய்தல் மற்றும் வடிவமைத்தல்**

பிரதான தண்டினை 80-90 செமீ உயரம் வரை விட்டு முனையைக் கிள்ளி அதன் பின்பு நான்கு திசைகளிலும் வளர விட வேண்டும். மரத்தின் பிரதான தண்டின் அடிப்பாகத்தில் தோன்றும் போத்துக் கன்றுகளைக் கவாத்து செய்து அகற்ற வேண்டும். காய்ந்த குச்சிகளையும் வயது முதிர்ந்த கிளைகளையும் வெட்டிக் களைந்து அதன்பின்பு வெட்டிய பகுதியில் போர்டாக்ஸ் பசையினை தடவ வேண்டும். பூக்கள் புதிதாக தோன்றிய தளிர்களின் முனையில் தோன்றும். அறுவடை செய்தபின் ஆண்டிற்கு ஒரு முறை இளந்தளிர்களையும் பூக்களையும் தோற்றுவிக்க மிதமான கவாத்தினை மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில், செப்டம்பர் மற்றும் பெப்ரவரி ஆகிய மாதங்களில் அதிக பக்க குச்சிகளை ஊக்குவிப்பதற்காக முந்தைய பருவத்தில் தோன்றிய தண்டுக்குச்சிகளை முனையின் 10-12செ.மீ நீளம் வரை கவாத்து செய்ய பரிந்துரை செய்யப்படுகின்றது. மகாராஷ்டிரா மாநிலத்தில் சில பகுதிகளில் அதிக மகசூல் பெற வேரினை கவாத்து செய்யும் முறை பின்பற்றப்படுகின்றது. இம்முறையில், கிளையின் தொடக்கத்தில் 30 செ.மீ நீளம் வரை விட்டு மீதமுள்ளவற்றை வெட்டி விட வேண்டும். வெட்டப்பட்ட கிளையிலிருந்து அதிக குச்சிகளும் பூக்களும் தோன்றி மகசூல் பெருகும். நேராக மற்றும் உயரமாக வளரும் தன்மைகொண்ட மரங்களின் கிளைகளை வளைத்து தரையோடு ஊன்றப்பட்ட ஆணியில் கட்டிவிட வேண்டும். இவ்வாறாக செய்யும் பொழுது கிளையில் உறக்கநிலையில் இருக்கும் மொட்டுக்கள் தூண்டப்பட்டு பூக்கள் மற்றும் காய்கள் தோன்றும்.

அவ்வாறாகத் தோன்றும் புதிய குச்சிகளில் பூக்கள் தோன்றும். செப்டம்பர் மாதத்தில் இப்புதிய குச்சிகளிலிருக்கும் மிதமென்தண்டு குச்சிகளை மீண்டும் கவாத்து செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வெட்டிய கீழ்ப்பகுதியில் புதிய குச்சிகள் தோன்றும். இறுதியாக, டிசம்பர் மாதத்தில் பழங்களின் விட்டம் 2.3 செ.மீ இருக்கும் பொழுது முந்தைய கவாத்தில் தோன்றிய குச்சிகளை மீண்டும் கவாத்து செய்ய வேண்டும். மூன்றாவது முறையாக செய்த கவாத்தில் தோன்றும் குச்சிகள் அடுத்த பருவத்தில் காய்கள் உற்பத்தி செய்வதில் அதிக திறன் வாய்ந்ததாக அமையும். இம்முறையில் ஒரு வருடத்திற்கு மூன்று முறை அறுவடை செய்யலாம்.

# ஸ்பிக் இடுபொருள் கண்காட்சி







ஸ்பிக் நிறுவனம் விவசாயிகளுக்குத் தேவையான ஏராளமான விவசாய இடுபொருட்களைத் தயாரித்து வழங்கி வருகின்றது. இந்தப் பொருட்களை விவசாயிகளுக்கு எடுத்துச் செல்வதில் ஸ்பிக் விற்பனையாளர்கள் முக்கியப் பங்கு வகுக்கின்றனர். விற்பனையாளர்களுக்கென ஒரு விசித்திரமான போட்டி ஏற்பாடு செய்திருந்தோம். அனைத்து ஸ்பிக் இடுபொருட்களையும் அழகாய் அடுக்கி வைத்து விவசாயிகளுடைய கண்ணையும் கருத்தையும் கவரும் விற்பனையாளர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தோம். அனேக விற்பனையாளர்கள் மிக அழகாக ஸ்பிக் பொருட்களை தங்கள் கடைகளில் அலங்காரம் செய்திருந்தனர். 15.12.2014 முதல் 14.01.2015 வரை நடைபெற்ற இந்தப்போட்டியை ஸ்பிக் அதிகாரிகள் நேரடியாகப் பார்வையிட்டு பரிசு பெறுபவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். வெற்றி பெற்றவர்கள் பற்றிய தகவல் அடுத்த இதழில் வெளிவரும்.











# பூச்சிகளை அழிக்கும் அக்னியாஸ்திரம்

"கரண்ட் ஹை வோல்டேஜ் வந்தாலும் இந்த பிராப்ளம் இருக்கும், சக்திவேலு ஜாக்கிரதையாப் பாரு" என்று செல்ஃபோனில் யாரிடமோ சொல்லிக் கொண்டே நமக்கு பேட்டியும் தர முன் வந்தார் திருமதி லெட்சுமி இளங்கோ என்ற பெண் விவசாயி.

அவருடைய கணவர் திரு.இளங்கோ, "சார், விவசாயத்தப்பத்தி என்னன்னாலும் என் மனைவிகிட்ட கேட்டுக்கிடுங்க, அவங்கதான் முழுசா விவசாயத்த பாத்துக்கிடுறாங்க" என்று சொல்லி விட்டார். சாயங்கால வேளையில் நாங்கள் திருமதி.லெட்சுமியைச் சந்தித்ததால் களைத்துப் போயிருந்தார். மிகவும் எளிமையான தோற்றம். ஆயினும் பேச்சில் இருந்த ஒரு மிடுக்கு அவர் சாதாரண பெண்ணல்ல, ஒரு லட்சியவாதி என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. பேச ஆரம்பித்தார்.

"சார், எனக்கு விவசாயத்தில் 10 வருட அனுபவம். மத்தவங்களப் போல நானும் ஒரு குடும்பத் தலைவியாத் தான் வாழ்ந்து வந்தேன். என் கணவர் திரு.இளங்கோ பருத்தி கமிஷன் மண்டியையும் விவசாயத்தையும் சேர்த்து





பாத்துக்கிட்டிருந்தார். பொதுவாக நான் அதிகமா வார இதழ்கள் மாத இதழ்கள் படிப்பேன். குறிப்பா வேளாண் பத்திரிக்கைகள்ன்னா எனக்கு உசிரு. வேளாண் செய்திகளையும், வெற்றி பெற்ற விவசாயிகளின் கருத்துகளையும் வாசிக்க வாசிக்க விவசாயத்தில் ஆர்வம் அதிகமாச்சுது. கொஞ்சம் கொஞ்சமா தோட்டத்துக்குப் போக ஆரம்பிச்சேன். நான் படித்து மனசுலே வாங்கிக் கொண்ட கருத்துக்கள செயல்வடிவாக்க ஆரம்பிச்சேன். வேலை செய்கிற ஆட்கள் புரிஞ்சிகிட்டு அதை சரியா செய்யல. அதனால முழுமையா நானே விவசாயத்துல இறங்கிட்டேன். மூத்த மகன் முதல் வருடம் இஞ்சினியரிங் படிக்கிறான். இளையவன் 10வது. காலையிலே பிள்ளைகளை எல்லாம் ஸ்கூலுக்கு அனுப்பிச்சி வைச்சிட்டு கணவரையும் கவனிச்சிட்டு தோட்டத்துக்கு வந்துருவேன். வீடு வாசல் எல்லாம் திண்டுக்கல்லுலே இருக்குது. எங்க தோட்டம் திண்டுக்கல்லுல இருந்து 10 கிலோ மீட்டர் தூரம் தான். என்னுடைய கணவர் எனக்கு ரொம்ப சப்போர்ட்டு, ஒரு ஸ்கூட்டி வாங்கிக் கொடுத்திருக்கிறார். நான் விவசாயத்திலே ஈடுபட்டபோது அவர் அதுக்கு எதிர்ப்பு தெரிவிச்சுருந்தாலோ அனுமதிக்காமல் இருந்தாலோ நான் விவசாயத்துக்கு வந்துருக்க மாட்டேன். அது மட்டுமல்ல என்னைய ஊக்குவிக்கவும் செய்வாரு. இன்னொரு கோணத்தில் இருந்து பாருங்களேன். நான் முழுசும் பண்ணைய பார்த்துக்கிடறதால அவருக்கும் வேலைப்பளு குறையுது. நானும் வீட்டுல உட்கார்ந்து வெட்டிக் கதை பேசாம எனக்கு பிடிச்சமான விவசாயத்த பார்க்க உதவியாக இருக்குது. குறிப்பாக எனக்கு இயற்கை வேளாண்மைன்னா ரொம்ப பிடிக்கும். அதுக்காக இரசாயன உரங்களுக்கும் மருந்துகளுக்கும் நான் எதிரின்னு நெனச்சிடாதீங்க. அதோ நெல் போட்டுருக்கேன் பாருங்க ADT 45. முழுசா இயற்கை வேளாண்மை முறையிலே தான் வளர்ந்துக்கிட்டிருக்குது"

"பத்து வருசத்துக்கு முன்னாலே விவசாயத்துக்கு வந்த புதுசு. அதுக்கு முன்னாலே நிலத்தை குத்தகைக்கு விட்டிருந்தோம். குத்தகைக்காரங்களிடமிருந்து கையகப்படுத்தின பிறகு தென்னை, வாழை அதுக்குள்ளே ஊடுபயிரா உளுந்து, தட்டாம்பயிரு, தர்பூசணி பயிர் செய்து வர்ரோம். நான் நேரடியாக விவசாயத்துக்கு வந்தபோது முதன்முதல்ல சம்பங்கி போட்ட போது பெரிய ஃபெய்லியர், ஏன்னா நான் ஆர்கானிக் விவசாயத்துக்கு அப்போ புதுசு. பட்டறிவு இல்ல. புத்தக புழுவாகத்தானே இருந்தேன். அனுபவ அறிவு இல்லாததால, சுத்து முத்தும் இருக்கிறவங்க கேலி பேச ஆரம்பிச் சுட்டாங்க. இந்தப் பொண்ணு விவசாயத்திலே என்ன செஞ்சிற போது.. நாங்க எத்தனையோ வருஷம் விவசாயம் செஞ்சு பார்த்து நஷ்டத்தத்தான் பார்த்துகிட்டு இருக்கோம்.



கொஞ்ச நாளு பாடுபட்டுப்புட்டு அப்புறம் ஒண்ணும் முடியலயின்னு ஊரப்பாத்து ஓடிப்போயிடும்முன்னு வக்கண பேசுவாங்க. ஆனா நான் அவங்க சொன்ன மாதிரி விவசாயத்த விட்டுவிடல, எப்படியாவது ஜெயிச்சு காட்டுணுங்குற வைராக்கியம் எனக்குள்ள இருந்தது. முதன்முதலா ஆர்கானிக்ல நெல்லுப் போட்டேன். 25 சென்ட் ADT 45 நட்டேன். 8 மூட நெல்லு கிடைச்சுது. ஒரு மூடை 75 கிலோ என்ற கணக்கிலே 600 கிலோ அறுவடை செய்தேன். மகசூல் பெரிய அளவில் இல்லன்னா கூட அந்த முதல் அறுவடை எனக்கு கிடைச்ச முதல் வெற்றி. அறுவடைசெஞ்சி நானே அதைக் கொண்டு போயி அரிசியாக்கி சமையல் செஞ்சி சோறு போட்ட போது என் மாமனார் வாயில் இருந்து முதல் பாராட்டு வந்தது. இதுவரைக்கும் இவ்வளவு சுவையா சோறு சாப்புட்டதில்லையனு அவங்க சொன்ன போது எனக்கு மகுடம் வைச்ச மாதிரி இருந்தது."

"நெல்லுல புகையானும், பூச்சியும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இருந்தது. அவை வராமல் இருக்கப் போராடினேன். அப்போது கூட இரசாயன பூச்சி மருந்துகள் உபயோகிக்கல. அந்த நேரத்துல பூச்சிகள அழிக்க ஒரே வழி "அக்னியாஸ்திரம்" தான்னு தெர்ஞ்சுகிட்டேன். அக்னியாஸ்திரம் செய்ய நானே கத்துக்கிட்டு, தயார் செய்து மூன்று முறை நெற்பயிருக்கு தெளிச்சேன். இப்ப வரைக்கும் எல்லா பயிர்களுக்குமே அக்னியாஸ்திரத்தை தான் அதிகமா பயன்படுத்துறேன்.

அக்னியாஸ்திரம் செய்யும் முறையை விளக்குறேன். கேளுங்க.

1. புகையிலை - $\frac{1}{2}$ கிலோ
2. பச்சை மிளகாய் - $\frac{1}{2}$ கிலோ
3. வெள்ளைப் பூண்டு - $\frac{1}{2}$ கிலோ
4. வேம்பு இலை - 2 $\frac{1}{2}$ கிலோ
5. கோமியம் - 10 லிட்டர்

எல்லாத்தையும் இடிச்சி, நசுக்கி, கோமியத்தோடு சேர்த்து மண்பானையில் வைத்துக் கொதிக்க வைச்சேன். மூணு கொதி வந்த பிறகு இறக்கி 24 மணி நேரம் அப்படியே விட்டு பிறகு மெல்லிய துணியில் வடிகட்டி ஒரு பாத்திரத்தில் சேமித்து வைச்சுகிட்டேன். இப்படி தயார் செய்த



அக்னியாஸ்திரம் மூணு மாசம் வரைக்கும் கெட்டுப் போகாம உபயோகப் படுத்திக்கலாம். பவர் ஸ்பிரேயர்ல 10 லிட்டர் தண்ணிக்கு அதாவது ஒரு டேங்குக்கு 100 மில்லி அக்னியாஸ்திரம் கலந்து பயிர் மேல தெளிக்கணும். இதை எல்லாப் பயிருக்குமே தெளிக்கலாம். பூச்சி லேசா வர ஆரம்பிக்கும் போதே முதல் ஸ்பிரே கொடுத்துருவேன். அக்னியாஸ்திரம் மாவுப் பூச்சியைக் கூட கண்ட்ரோல் பண்ணிடும்."

"பொறி வண்டு போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்த பச்சைச் சாணியே போதும். பச்சைச் சாணிய ஒரு பக்கெட்ல போட்டு நல்லாக் கரைச்சிக் கையாலத் தெளிச்சாலே கண்ட்ரோல் கிடைச்சிரும். இயற்கை மருந்துகளை உபயோகிக்கும்போது ஒரே வகையான மருந்துகளையே தெளிச்சிகிட்டு இருந்தா சரி வராது. மாத்தி மாத்தித் தெளிக்கணும்."

"இன்னொரு முறை சொல்லுறேன் கேளுங்க. கொஞ்சம் சிம்பிளான பூச்சிமருந்து செய்யும் முறை. இதை செய்ய 1 கிலோ வேப்பங் கொட்டை வேணும். வேப்பங்கொட்டை சுத்தமான கொட்டையா இருக்கணும். அதுனாலே நான் வேப்பங் கொட்டைய வெளிய வாங்குறது கிடையாது. வேப்பம்பழம் பழக்கும் காலத்துல பறவைங்க பழத்தத் தின்னுட்டு கொட்டையப் போடும் பாருங்க. எச்சத்தோடு போட்ட கொட்டையிலே ஒரு வீரியம் இருக்கும். இப்படி எடுத்த வேப்பம் கொட்டையத்தான் உபயோகிப்பேன். 1 கிலோ வேப்பங் கொட்டைக்கு 1/2 கிலோ வெள்ளைப் பூண்டு சேர்த்து நல்லா இடிச்சிக்கிடுவேன். இதை 10 லிட்டர் கோமியத்திலே ஊற வைக்கணும். மண்பானை அல்லது பிளாஸ்டிக் வாளியிலயோ அல்லது குடத்திலேயோ ஊற வைக்கலாம். ஆனால் உலோகத்தினால் செய்யப் பட்ட பாத்திரத்தில் ஊற வைக்கக் கூடாது. 4 - 5 நாள் ஊறின பிறகு அதை வடிகட்டிப் பூச்சி



மருந்தா உபயோகிக்கலாம்."

"எங்க தோப்புல நிறைய தென்னை மரங்கள் இருக்குது பார்த்தீங்களா? தென்னையிலே பெரியப் பிரச்சினை காண்டாமிருக வண்டுதான். இளங்குருத்துப் பாளை வர்றதுக்கு முன்னாலேயே கடிச்சித்தின்னு நாசம் பண்ணிடும். இத கண்ட்ரோல் பண்ணவும் இயற்கை முறையத்தான்

உபயோகிப்பேன். எருக்கம் இலைய பறித்துவந்து இடிச்சி ஒரு பானையிலே போட்டு இலையெல்லாம் நனையிற மாதிரி தண்ணி ஊத்தி வைச்சுருவேன். வாயைத் துணியாலே கட்டிடணும். 3 நாள் கழிச்சி இடிச்ச வேப்பங் கொட்டைத்தூள் ஒரு கைப்பிடி பானையிலே போட்டு பானையைத் திறந்தமாதிரி அப்படியே தென்னச் தோப்பில் வைச்சுருவேன். இப்படி தோட்டத்துலே 4 - 5 இடங்களில் பானை வைப்பேன். எருக்கந்தழை அழுகி நாற்றமெடுக்க ஆரம்பிக்கும் அந்த நாற்றத்துக்கு காண்டாமிருக வண்டு ஈர்க்கப்பட்டு பானைக்குள்ளே வந்து விழுந்து செத்து போகும்."

"இப்போ சம்பங்கி 60 சென்டல பயிர் செய்துருக்கிறேன். போன வருடம் மார்ச் மாசத்துலே நட்டேன். ஜீலை முதல் பூ எடுத்துக்கிட்டு இருக்கேன். நவம்பர் மாசத்துல அதிக பட்சமா 45 கிலோ பூ கிடைச்சுது. இப்போ சராசரியா 15 யிலிருந்து 20 கிலோ பூ வந்துகிட்டு இருக்குது. நவம்பர்லே பூ நிறைய வந்த போது ஒரு கிலோ ரூபாய் 20க்குத் தான் விற்பனையாச்சிது. இப்போ ரேட் பராவாயில்லே ஒரு கிலோவுக்கு ரூபாய் 40 வரை கிடைக்குது. தினமும் பூபறிச்சிடுவோம். சம்பாங்கிலே மட்டும் ஒரு மாசத்துக்கு சுமார் 24000 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. சம்பங்கிக்கு மூடாக்கு போட்டிருக்கேன். சொட்டு நீர் மட்டுமல்ல தெளிப்பு நீரும் போட்டிருக்கேன். நிலக்கடலை ஒரு ஏக்கர்ல போட்டுருக்கேன். நெல்லு 60 சென்ட் நட்டுருக்கேன். வீட்டுக்குத் தேவையான எல்லாம் ஆர்கானிக்கிலேயே போட்டு எடுத்திடுவேன். சராசரியா ஒரு மாதத்திற்கு விவசாயத்திலிருந்து ரூபாய் 30,000 வருமானமா கிடைக்கிறது. 4 - 5 ஆட்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுக்கிற திருப்தி. சுற்றுப்புற சூழ்நிலைய பாழாக்காம இயற்கையோடு இயற்கையா ஒன்றி, நம்ம உடம்பையும் கெடுத்துக்கிடாம மத்தவங்களையும் கெடுக்காம செய்யிற இந்த விவசாயத்திலே பெரிய வருமானம் கொடுக்கிற திருப்தியைக் காட்டிலும் ஒரு அலாதி இன்பம்... அமைதி... இதுக்கு மேலே ஒரு பொண்ணுக்கு என்ன வேணும், சொல்லுங்க சார்?




கீழாநெல்லி அனைத்து மருந்துவ முறைகளிலும் பயன்படும் ஒரு முக்கிய மருந்துப் பயிராகும். இது மிகவும் குறுகிய வயது கொண்ட மாறுபட்ட தட்பவெப்ப நிலைகளில் வளரும் தன்மை மற்றும் எளிதான சாகுபடி முறை போன்ற தனித்தன்மை களைப் பெற்றுள்ளது. பல வகைப்பட்ட மருந்துவக் குணங்களைக் கொண்டிருப்பதால் இந்திய மருத்துவத்தில் அரிய மூலிகையாகக் கருதப்படுகிறது. இதன் வேர், தண்டு, இலை ஆகிய அனைத்துப் பாகங்களும் மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

கீழாநெல்லின் காய்ந்த இலைகளையும், தண்டுகளையும், பொடி செய்து தண்ணீரில் கலந்து டானிக் போல அருந்துவதன் மூலம் உடலில் உள்ள மஞ்சள் காமாலை நோய் குணம் அடைகிறது. நோய்களுக்கு எதிரான எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதால் இதன் பொடியைப் பாலுடன் கலந்து அருந்தலாம். கீழாநெல்லி சிறுநீர் பெருக்கியாகவும், வெப்ப அகற்றியாகவும், வீக்கம், கட்டி ஆகியவற்றைக் கரைத்து நரம்பு, சதை ஆகியவற்றைச் சுருங்கச் செய்யும் மருந்தாகவும் செயல்படுகிறது. மஞ்சள் காமாலை மட்டுமின்றி மாலைக்கண், பார்வை மங்கல், பீனிசம், ஓயாத தலைவலி, நீர்வடிதல், கல்லீரல் பழுது, சோகை, இரத்தமின்மை ஆகியவற்றிற்கும் சிறந்தது.

# வாழையில் 2 லட்சம் வருமானம்



விவசாயிகளுக்கு வாழையைப் போல லாபம் தரக்கூடியப் பயிர் எதுவுமில்லை என்று சொல்லலாம். தமிழ்நாட்டில் வருடா வருடம் வாழை விவசாயம் செய்யும் பரப்பளவு அதிகரித்துக் கொண்டே வருகிறது. காரணம் என்னவென்றால், மண்வளம் காத்து துல்லிய பண்ணையத் திட்டத்தில் வாழைப் பயிர் செய்யும் ஒவ்வொரு வாழை விவசாயியும் ஒரு ஏக்கரில் 2 லட்சத்துக்கு மேல் வருமானம் பெற்று விடுகிறார்கள். உலகில் உற்பத்தி செய்யப்படும் வாழையில் பாதியளவு ஆசிய நாடுகளிலிருந்து தான் உற்பத்தி செய்யப்படுகின்றது. சராசரி உற்பத்தித் திறனில் தமிழகம் 50 டன் / ஏக்கர் விளைவித்து இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கிறது. இதிலிருந்து தமிழகத்தில் வாழை விவசாயம் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதைத் தெரிந்துக் கொள்ளுங்கள். வாழையில் பல இரகங்கள் உண்டு. இரகத்துக்கு ஏற்ப மகசூலும் கீழ்கண்டவாறு கிடைக்கிறது. எல்லாவற்றைப் பார்க்கிலும் ரொபஸ்ட்டா, கிராண்ட் நைன் போன்றவற்றின் திசு வளர்ப்பு வாழை அதிகபட்சமாக ஏக்கருக்கு 40 டன் வரை மகசூல் கொடுக்கிறது.

| | |
|---|---|
| பூவன், ரஸ்தாளி, நெய் பூவன் | 20 டன் |
| ரொபஸ்டா, குட்டை கேவண்டிஸ் | 24 டன் |
| மொந்தன் | 16 டன் |
| கிராண்ட் நைன் - திசுவளர்ப்பு வாழை | 40 டன் |

**வாழையில் துல்லியப் பண்ணையம் :**

துல்லிய பண்ணையத்திற்குத் திசுவளர்ப்பு வாழைகளான கிராண்ட் நைன், ரொபஸ்டா, நேந்திரன், செவ்வாழை, ரஸ்தாளி ஆகியவை ஏற்றவை.

திசு வாழை வருடம் முழுவதும் பயிரிட ஏற்றது. இருப்பினும், அந்தந்த பகுதிகளில் நிலவும் சீதோஷ்ண நிலைக்கேற்ப குறிப்பாக, வாழை அறுவடைக்கு வரும் காலங்களில், காற்று அதிகம் இல்லாமலும், நடவுப் பருவத்தை தீர்மானிக்க வேண்டும். பொதுவாக ஜீன் - ஜீலை மாதங்களில் நடவு செய்யலாம்.

**கன்றுகளின் எண்ணிக்கை :**

ஒரு ஏக்கருக்கு குறைந்தபட்சம் 1200 கன்றுகள் தேவை. வாழை 6 X 6 அடி மற்றும் 7 X 5 அடி என்ற இடைவெளிகளில் நடவு செய்யலாம். 1.5 X 1.5 அடி அளவில் எடுக்கப்பட்ட குழிகளில், மக்கிய தொழுஉரம், கம்போஸ்ட் மற்றும் மேல் மண்ணை 1 : 1 என்ற விகிதத்தில் கலந்து இட வேண்டும். அத்துடன் சூப்பர் பாஸ்பேட் 250 கிராம், வேப்பம் புண்ணாக்கு 500 கிராம், பியூரடான் 20 கிராம் இட்டு கன்றுகளை நட வேண்டும். தினமும் சொட்டு நீர் பாசன முறையில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நடவு செய்தவுடன், கன்று நடவு செய்த பகுதிகளில் 1 லிட்டர் நீரில் 10 கிராம் பிளிச்சிங் பவுடர் கலந்து தூர்களில் ஊற்ற வேண்டும்.

**நீர் நிர்வாகம் :**

நடவு செய்தவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு நான்கு நாட்கள் கழித்து ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். அதன் பிறகு, வாரம் ஒரு முறை தோட்டக்கால் வாழைக்கும், 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு மறை நஞ்சை வாழைக்கும் நீர் பாய்ச்ச வேண்டும். வாய்க்கால் மூலம் நீர் பாய்ச்சுவதைப் பார்க்கிலும் சொட்டு நீர் மூலம் பாய்ச்சினால் தான் அதிக மகசூல் பெற முடியும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மேற் கொண்ட ஆராய்ச்சியில் ஒரு வாழைக்கு நாள்தோறும் 16 லிட்டர் முதல் 20 லிட்டர்

தண்ணீர் சொட்டு நீர் பாசன முறை மூலம் தேவைப்படும் என தெரியவந்துள்ளது.

**உர மேலாண்மை**

திசு வளர்ப்பு முறையில் வளர்க்கப்படும் வாழையானது சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் சொட்டு உரப்பாசனத்தினால் உயர் தொழில் நுட்ப முறையில் வளர்க்கப்படுகிறது. எனவே சொட்டு நீர்ப்பாசன அமைப்பில் செடி நடவு செய்த 5 ஆம் நாள் முதல் அறுவடை செய்யும் 300 ஆம் நாள் வரை உரப்பாசனம் கொடுக்கப் படுகிறது.

| | |
|---|---|
| தழை : மணி சாம்பல சத்துக்கள் பரிந்துரைக்கப்படும் அளவு | : 200 : 35 : 300 கி/கன்று ஒன்றுக்கு |
| 100 % மணிச்சத்தையும் சூப்பர் பாஸ்பேட் மூலம் அடியுரமாக இட்டுவிட வேண்டும். | : 260 கிலோ சூப்பர் பாஸ்பேட் / ஏக்கர் |
| சொட்டுநீர்ப் பாசன மூலம் தழை : மணி பரிந்துரைக்கப்பட்ட அளவு | : 254 கிலோதழை 381 கிலோ சாம்பல்சத்து / ஏக்கர். |

| வ. எண் | பயிர்வளர்ச்சி பருவம் | கால இடைவெளி நாட்கள் | நீர்வழி உரத்தின் பெயர் | நீர் வழி உர அளவு (கிலோ) ஏக்கர் |
|---|---|---|---|---|
| 1. | நடவு நாளிலிருந்து வேர் பிடித்தல் வரை | 9 - 18 வாரம் | 13-0-45 யூரியா | 170<br>120 |
| 2. | தழை வளர்ச்சிப் பருவம் | 19 - 30 வாரம் | 13-0-45 யூரியா | 340<br>180 |
| 3. | பூ பூக்கும் காலம் | 31-42 வாரம் | 0 : 0 : 50<br>யூரியா | 150 ;<br>110 |
| 4. | தார் அறுவடை | 43-45 வாரம் | 0 : 0 : 50 | 150 |

ஒரு ஏக்கருக்கு மொத்த உரத் தேவை

13 : 0 : 45 - 510 கிலோ

யூரியா - 410 கிலோ

0 : 0 : 50 - 300 கிலோ

**உயிர் உரம் மற்றும் நுண்ணூட்டச்சத்து :**

4 பொட்டலங்கள் அசோஸ்பைரில்லம், 4 பொட்டலங்கள் பாஸ்போபாக்டீரியா, 4 கிலோ சாணம் ஆகியவற்றை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து, மரம் ஒன்றுக்கு 3 லிட்டர் வீதம் 2வது மற்றும் 3 வது மாதங்களில் மரத்தைச் சுற்றி ஊற்றிவிட வேண்டும். ரொபஸ்டா வாழைக்கு நுண்ணூட்டச்சத்து இடுவதால், நல்ல மகசூல் பெறமுடியும் என கோவை தோட்டக்கலைக் கல்லூரியில் நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகள் மூலம் தெரியவந்துள்ளது. 1 லிட்டர் நீரில் 5 கிராம் தாமிர சல்பேட் மற்றும் 1 கிராம் போராக்ஸ் ஆகியவை கலந்த நுண்ணூட்டச்சத்து கரைசலை, நட்ட 3வது மற்றும் 5வது மாதங்களில் தெளிக்க வேண்டும்.





தெளிக்கவும். வாழை தார்களின் எடை மற்றும் தரத்தினை அதிகரிப்பதற்கு கடைசி சீப்பு வந்த பின் பொட்டாசியம் சல்பேட் (15 கிராம் 1 லிட்டர் நீரில்) என்ற அளவில் கலந்து வாழைத் தார்களின் மீது 3, 4 முறைகள் தெளிக்க வேண்டும். சுமார் 40லி கரைசலில் 200 தார்கள் வரை தெளிக்கலாம்.

**வாழைக் குலைகளை பாதுகாத்தல் :**

வாழைக் குலைகளை துளையிட்ட பாலித்தீன் பைகள் கொண்டு மூடுவதன் மூலம் பனி, சூரியனின் கதிர்கள், அசுவினி மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க முடியும். மேற்கொண்ட முறைகளைக் கடைபிடித்தால் கிராண்ட் நைன் திசு வளர்ப்பு வாழையில் 40 டன்னுக்கும் மேலாகவே மகசூல் பெறலாம்.

**பின்செய் நேர்த்தி :**

இரண்டு மாதத்திற்கு ஒருமுறை நிலவெட்டு கொடுத்து மண் அணைக்க வேண்டும். மாதம் ஒருமுறை பக்கக்கன்றுகளை அகற்ற வேண்டும். காய்ந்த மற்றும் நோய்தாக்கப்பட்ட இலை களைச் சேகரித்து எரித்து விட வேண்டும். இவ்வாறு செய்தால் இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்தலாம். கடைசி சீப்பு வெளிவந்த ஒரு வாரத்தில் ஆண்பூவை ஒடித்துவிட வேண்டும். குலைதள்ளும் நேரத்தில், மரங்கள் சாய்ந்து விடாமலிருக்க, மூங்கில் அல்லது சவுக்கு போன்ற கம்புகள் கொண்டு முட்டுக் கொடுக்க வேண்டும். குலைக்காம்பு அழுகல் நோயைத் தடுக்க கண்ணாடி இலை கொண்டு குலைக் காம்பை மூடிவிட வேண்டும். வெய்யிலினால் காய்கள் சேதம் அடைவதைத் தடுக்க குலைகளை வாழை இலைகளைக் கொண்டு மறைத்து வைக்க வேண்டும். மரம் தார்விடும் தருவாயில் மறுதாம்புப் பயிருக்கு ஒரு வீரிய பக்கக் கன்றை ஒதுக்கி விட்டு பேணிக் கொள்ள வேண்டும்.

**வளர்ச்சி ஊக்கி :**

பூவன் வாழையில் கொட்டை உண்டாவதைத் தடுக்கவும் பூவன், ரஸ்தாளி, மொந்தன், கோ 1 போன்றவற்றின் குலைகளின் தரத்தை அதிகரிக்கவும் 25 மில்லி கிராம் 2, 4 D மருந்தை 1 லிட்டர் நீரில் கரைத்து, கடைசி சீப்பு வெளிவந்ததும்







ஸ்ரீ G.R.சக்திவேல்
ஈரோடு மாவட்டம் – 638461.
அலைபேசி : 09486316041

5 கிலோ ஆமணக்கு விதைகளை நன்கு அரைத்து கொள்ள வேண்டும். இதனுடன் 5 லிட்டர் நீருடன் கலந்து எந்த வித இடையூறுமின்றி 10 நாட்கள் நொதிக்க வைக்க வேண்டும். அதே சமயத்தில் 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட 5 மண்பானைகளை 1 ஏக்கர் நிலத்தில் வைக்க வேண்டும். ஒவ்வொரு மண் பானையிலும் 2 லிட்டர் நொதித்த கரைசலை சேர்க்க வேண்டும். அதனுடன் மீதி பகுதிக்கு நீர் சேர்க்க வேண்டும். இந்த துர்நாற்றம் பூச்சிகளை கவரும்.

இந்த கரைசலை மரத்தின் அருகில் புதைப்பதால் இந்த துர்நாற்றத்திற்கு பூச்சி அதை நோக்கி வந்து மண்பானைக்குள் விழுந்து இறந்து விடும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை மண்பானைக்குள் இறந்த பூச்சிகளை எடுத்துவிட வேண்டும். பிறகு இந்தக் கரைசலை மீண்டும் உபயோகிக்க வேண்டும், பூச்சிகளின் எண்ணிக்கை குறையும் வரை உபயோகிக்கலாம். இந்த கரைசலை 3 மாதங்கள் வரை சேமித்து வைக்கலாம்.

இந்த நொதித்த ஆமணக்குக் கரைசல் பூச்சிகளை கட்டுப்படுத்தும். குறிப்பாக சாம்பல் நிற வண்டு, கூன் வண்டு, காண்டாமிருக வண்டு இவற்றைக் கட்டுப்படுத்தும். இது மேலும் எலிகள் போன்ற வற்றை நிலத்திற்குள் வரவிடாமல் தடுக்கும். இயற்கை சூழலுக்கு ஏற்றபடி இந்தக் கரைசல் கரும்பு, பருத்தி, நிலக்கடலை பயிர்களில் சாம்பல் நிற வண்டை குறைந்த செலவில் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பமாகும். இந்த முறையில் பயிரைப் பாதுகாக்கும் செலவு 20% அளவு குறைகிறது. முழு செயல்பாட்டிற்கும் ஆகும் செலவு ரூ.250/- மட்டுமேசெலவாகிறது.

## அறிவிப்பு

உங்களுடைய பண்ணைச் செய்தி பதிவு எண்ணைத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் அனுப்பும் பத்திரிக்கைக் கவரில் விலாசத்தின் முதல் வரியில் வரிசை எண் மற்றும் பதிவு எண் குறிப்பிட்டப் பட்டிருக்கும். கவர் மேலுள்ள உங்கள் விலாசத்தில் பின்கோடு, செல்ஃபோன் போன்றவை இல்லாமல் இருந்தால் உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

# பிரிஜ்வால் சம்பங்கி



**பண்ணை விஜயம் :**
**திண்டுக்கல் மாவட்டம், ஒட்டக்கோயில்பட்டி விவசாயி ஆர்.சசிகண்ணனுடன் ரெட்டியார் சத்திரம், தோட்டக்கலை உதவி இயக்குநர் திரு.சீனிவாசன் மற்றும் துணை அலுவலர் திரு.சென்ராயன்.**

சசிகண்ணன் : "கரெக்டா விவசாயம் பண்ணினா, விவசாயம் லாபமான தொழில்தான். எந்தத் தொழிலுக்குமே கவனமும் சிரத்தையும் ரொம்ப அவசியம். உதாரணத்திற்கு உங்களையே எடுத்துக் கொள்வோமே, நீங்க வேலைக்கு போறீங்க காலையிலே போனிங்கன்னா சாயங்காலமந்தான் வருவீங்க இல்லையா? எட்டு மணி நேரம், பத்து மணி நேரம் வேலை செய்வீங்க இல்லையா? விவசாயியும் அப்படித்தான். மரத்துக்கு அடியிலும், டீக்கடையிலும் உட்கார்ந்து பொழுது போக்கினால் விவசாயம் சரியாக வராது. முழுகவனமும் செலுத்த வேண்டும். ஒரு நாளைக்கு எட்டு மணி நேரமாவது தோட்டத்தில் செலவழிக்க வேண்டும், பாடு பட வேண்டும். மொத்தம் 7 $\frac{1}{2}$ ஏக்கர் விவசாயம் செய்தேன். நான் என் மனைவி, அம்மா 3 பேரும் தோட்டத்தில் வேலை பார்ப்போம்."

"இப்போ ப்ரிஜ்வால் சம்பங்கி பயிர் செய்திருக்கிறேன். பிரிஜ்வால் வீரியஒட்டு என்பதால் இலைஅகலம் அதிகமாகவும் கிழங்கு பெரியதாகவும் பூக்கள் வெள்ளையும் பிங்க் நிறமும் கலந்ததாகவும் இருக்கும். நாட்டு சம்பங்கிய விட பிரிஜ்வால் சம்பங்கிக்கு மார்க்கெட்டுல நல்ல ரேட் கிடைக்குது. தற்போது சம்பங்கி 1 கிலோ ரூ.60க்கு விற்குது. 2014 லே அதிகபட்சமா 1 கிலோ 550 வரைக்கும் வித்துருக்கிறது. முகூர்த்த நாள் கோயில் திருவிழா நேரங்களிலே கிலோ ரூ.250 - 300 வரைக்கும் விலை கிடைக்கும். சராசரியா 3/4 ஏக்கர் சம்பங்கியிலிருந்து மாதத்துக்கு 21,000 வருமானம் கிடைக்குது."

திரு.சீனிவாசன் : "இவங்களுக்குத் தோட்டக்கலைத் துறையிலிருந்து சொட்டு நீர் கொடுத்துருக்கிறோம். 75% மான்யம். அதுவுமில்லாம எங்கள் அறிவுரைப்படி முதன் முதலாக இந்த ஏரியாவிலே சம்பங்கிக்கு மூடாக்கு (Mulching Sheet) அமைத்திருக்கிறார். மூடாக்கு போடுறனாலே கீழ் கண்ட லாபம் உண்டு.

1. சொட்டு நீர் மூலமாக கொடுக்கிற தண்ணீர் ஆவியாகிப் போகாமப் பாதுகாக்குது.
2. சொட்டு நீர் மூலமாகக் கொடுக்கிற உரங்களும் ஆவியாகம மூடாக்குத் தடுக்கிறது.
3. மூடாக்குக்குக் கீழே உள்ள வேர் தொகுதியில் ஒரு விசேஷித்த தட்பவெப்ப சூழ்நிலை உண்டாகி வேர் வளர்ச்சிய அதிகமாக்குது.
4. நீர் அதிகமாக ஆவியாகாததால் வேர்



தொகுதியில் உப்புத்தன்மை (Salinty) சேர்வதில்லை. வேர்த்தொகுதி உவர்த் தன்மையானால் சம்பங்கியில் பூக்கொண்டை தொங்கிவிடும். பாசனநீரில் உவர் தன்மை உள்ள விவசாயிகளுக்கு மூடாக்கு மிக உபயோகமானது.

5. மூடாக்குப் போடுவதால் களை எடுக்கற செலவு குறையும்.
6. சம்பங்கி மகசூல் அதிகரிக்கும்.
7. பூச்சி நோய் தாக்குதல் குறையும்.

திரு.சென்ராயன் : விவசாயிகள் இப்போது இருக்கிற நிலைமையிலே பட்டா, சிட்டா அடங்கல் இதையெல்லாம் ஒழுங்குப்படுத்தி வைச்சுக்கிடணும். 33 வருஷமா இந்த விவசாயிகள் கூட பழகிக் கொண்டிருக்கிறேன். பெரும்பாலான விவசாயிங்ககிட்டே ஆவணங்கள் (Documents) சரியா இருப்பது இல்ல. சரியான ஆவணங்களையும் தோட்டத்துடைய புகைப்படத்தையும் கொண்டு வந்து கொடுத்தாங்கன்னா மானியம் பரிந்துரை செய்யிறதும், வாங்கிக் கொடுக்குறதும் எளிதா இருக்கும்.



சசிகண்ணன் : எங்களுக்கு தோட்டக்கலை அதிகாரிகள் ரொம்ப உதவியா இருக்கறதுனாலே தான் சொட்டு நீர் போட்டு, மூடாக்கு உபயோகிச்சி சம்பங்கி, காய்கறி பயிர்கள் செய்வது எளிதாயிருக்கிறது.

## பண்ணைச் செய்தி சந்தா !

அன்பார்ந்த பண்ணைச் செய்தி வாசகர்களே !

அநேக வாசகர்கள் பண்ணைச் செய்தி மூலமாக பயன்பெறுவதாகவும், தங்கள் விவசாய வருமானத்தில் உயர்வு பெற பண்ணைச் செய்தி முக்கியப் பங்காற்றுவதாகவும் தெரிவித்து வருகிறீர்கள். மிக்க மகிழ்ச்சி. தற்போது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளியாகும் இப்பத்திரிக்கையை ஒவ்வொரு மாதமும் வெளியிட வேண்டுமென கோரிக்கைகள் வந்து கொண்டு இருக்கின்றன. அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை பண்ணைச் செய்தி பத்திரிக்கையை இலவசமாகவே வழங்கி வந்தோம். இனியும் பத்திரிக்கையைச் சிறப்பாக நடத்த வாசகர்களுடைய ஒத்துழைப்பை நாடுகிறோம்.

ஒவ்வொரு வாசகரும் ஒரு வருட பத்திரிக்கை சந்தாவாக ரூ.100 மட்டும் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி இந்தப் பத்திரிக்கைச் சேவை தொடர்ந்து செய்ய ஆதரவு தரும்படி வேண்டுகிறோம். மணி ஆர்டர் அனுப்பும் போது கண்டிப்பாக பாரத்தில் உங்கள் விலாசம் மற்றும் செல்ஃபோன் எண்ணைக் குறிப்பிடவும்.

# கேள்வி பதில்

**1. பி.கே.எம். 1 செடி முருங்கை விதைகளை நம்பத் தகுந்த கடையில் தான் வாங்கினேன். காய்க்க ஆரம்பித்தபோது பாதிக்கு மேல் குட்டைக் காய்களாக வருகின்றன. ஏன்?**

S.V.காமராஜ், சத்தியமங்கலம்.

பி.கே.எம்.1 விதை உற்பத்தி செய்யும் இடங்களைச் சுற்றிலும் சுற்றிலுள்ள பகுதிகளில் வேறு இரக முருங்கை மரங்கள் இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால் சாதா இரக மரங்களின் மகரந்தங்கள் விழுந்து சுத்தமான பி.கே.எம்.1 விதைகள் உருவாவது தடைபடுகிறது. சந்தையில் கிடைக்கும் அநேக விதைகள் தரமாக இல்லாததற்கு இதுவே காரணம். இன்று ஒரிஜினல் பி.கே.எம்.1 விதைகள் கிடைப்பது அரிதாகி விட்டது. இந்தப் பிரச்சனைக்கு வழி சொல்கிறேன். கேளுங்கள்.

அரியலூர், ஆண்டிப்பட்டி பகுதிகளில் அதிகமாக பி.கே.எம்.1 முருங்கை சாகுபடி செய்யப்படுகிறது. அங்குள்ள விவசாயிகளை நேரடியாகச் சந்தித்து மரங்களை பார்வையிடுங்கள் அவற்றில் 2 அடி நீளமுள்ள நன்கு காய்த்துக் கொண்டிருக்கும் மரங்கள் இரண்டு அல்லது மூன்றை தேர்வு செய்து கொள்ளுங்கள். விவசாயிகளிடம் பேசி மரங்களை அப்படியே விலைக்கு வாங்கி கிளைகளையும் குச்சிகளையும் தரித்து எடுத்து வந்து விடுங்கள். குச்சிகளை 6 இஞ்ச் நீளத்திலும் கிளைகளை 1 அடி நீளத்திலும் வெட்டிக் கொள்ளுங்கள். பாலீத்தின் பைகளில் தென்னை நார் கழிவு மற்றும் வெர்மி கம்போஸ்ட் சரி சமமாகக் கலந்து நிரப்பிக் குச்சிகளை மேல் நோக்கி இருக்குமாறு ஜாக்கிரதை யாகப் பார்த்து நட்டு நிழல்வலை நாற்றங்காலில் வையுங்கள். பூவாளியால் நீர் பாய்ச்ச வேண்டும். துளிர் வந்து சுமார் 1 அடி வளர்ந்த பின் எடுத்து நடுங்கள். நூற்றுக்கு நூறு சுத்தமாக செடி முருங்கை கிடைக்க இதை விட சிறந்த வழி இல்லை.

**2. மக்காச்சோளம் பயிரிட இது ஏற்ற பட்டமா? விதை எவ்வளவு தேவை ?**

கே.அழகர், பாலங்குளம், விருதுநகர் மாவட்டம்.

ஹைபிரிட் மக்காச்சோளம் தண்ணீர் இருந்தால் எப்பொழுது வேண்டுமானாலும் பயிர் செய்யலாம். குறிப்பாக தற்போது ஆடிப்பட்டத்தில் பயிர் செய்யலாம். வேளாண் கல்லூரி வெளியீடான Co 6 ஹைபிரிட் வயது 110 நாள். இறவையில் ஏக்கருக்கு 2500 கிலோ மகசூல் தரக்கூடியது. 1 ஏக்கருக்கு 10 கிலோ விதையளவு தேவை. தனியார் விதை நிறுவனங்களான ஸின்ஜென்ட்டா, பயோனிர் போன்றவற்றின் ஹைபிரிட் விதைகளும் சிறந்தவை. ஸின்ஜென்டா NK6240 பரவலாகப் பயிரிடப்படுகிறது. பயோனிர் P3540 மானாவாரி விதைப்புக்கும், பயோனிர் P4546 இறவைக்கும் ஏற்றவை. பனோனிர் P3396 அதிக மகசூல் தரக்கூடியது.

**3. வெள்ளரி என்ன ரகம் பயிர் செய்யலாம்? விதைகள் எங்கு கிடைக்கும்?**

சுமன், செங்கம், திருவண்ணாமலை

பெரும்பாலும் வெள்ளரி பயிர் செய்ய கோடை மாதங்கள் தான் ஏற்றவை. வெள்ளரியில் இரண்டு வகை உண்டு. தரையில் படரவிட்டு வளர்ந்து பஸ் ஸ்டாண்டுகளில் கடைகளில் கொண்டுவந்து விற்கிறார்களே. அது சாதாரண நாட்டு ரகம். வெயில் காலத்தில் உண்பதற்கு மிகவும் ஏற்றது. இவை விதைத்த 45 நாட்களில் பறித்து விடலாம். ஆகவே கோடை காலமான ஏப்ரல், மே, ஜீன் மாதங்களைத் கணக்குப்பார்த்து விதை விதைக்கலாம்.

2 வது ரகம் உணவுடன் சேர்த்து உண்ணக்கூடிய சாலட் (Salat) வகை. இவற்றை பந்தல் போட்டு பயிர் செய்யலாம். பசுமைக் குடிலுக்குள் பயிர் செய்தால் அதிக லாபம் பெறலாம். பீஜோ, சன்குரோ போன்ற நிறுவனங்களின் ஹைபிரிட் ரகங்கள் அதிக எடையும் மகசூலும் தரக்கூடியவை.

# ஸ்பிக் ஜெயந்தி

## வில்லை வடிவிலான புண்ணாக்கு உரம்

ஸ்பிக் ஜெயந்தி – இது ஒரு அடர் அங்கக உரமாகும். இது பல வகை எண்ணெய்ப் புண்ணாக்குகளைச் சீரான விகிதத்தில் ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்ட உரமாகும். பயிர்களுக்கு எளிதில் இடும் வகையில் வில்லை வடிவில் (Pellet Form) தயார் செய்யப்படுகிறது. இதனால் சத்துச் சேதாரம் முழுவதும் தவிர்க்கப்படுகின்றது. பொதுவாக புண்ணாக்கு வகையைச் சார்ந்த உரங்கள், அடர் அங்கக உரங்களாக இருப்பதால் பயிர்களுக்கு அதிக சத்துக்களைச் சீராக அளிக்க வல்லது.

**பயிர்களுக்கு இடும் முறை :** எல்லா பயிர்களுக்கும் இட ஏற்றது. குறிப்பாக, காய்கறி, பழப்பயிர்கள் மற்றும் மலைத் தோட்டப்பயிர்களுக்கு பயனளிக்கக் கூடியது. இது 25 கிலோ பைகளில் கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு 2 மூட்டை முதல் 4 மூட்டைகள் வரை அடியுரமாகவும், மேலுரமாகவும் இடலாம்.

**நன்மைகள் :**

- மண்ணின் களர் மற்றும் உவர் தன்மையைக் குறைக்கிறது.
- மண்ணில் தங்கியுள்ள சத்துக்கள் பயிருக்கு கிடைக்க வழி செய்கிறது.
- மண்ணின் நீர்ப்பிடிப்புத்தன்மையை அதிகரிக்கிறது.
- பேரூட்டச்சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களைப் பயிர்களுக்கு அளிக்கிறது.
- மண்வளத்தை அதிகரித்து மண்ணிலுள்ள பாக்டீரியாக்கள் பெருக வகை செய்கிறது.
- கடின மண்ணில் காற்றோட்டம் மற்றும் நீர் ஊடுருவும் திறன்கள் மேம்படுத்தப்படுகின்றன.
- பயிர்களை நோய் மற்றும் பூச்சிகளின் தாக்குதலிருந்து பாதுகாக்கிறது.
- நிறைந்த தரமான மகசூல் கிடைக்கவும் விளை பொருட்களை நீண்ட நாட்களுக்கு சேமிக்கவும் வழிசெய்கிறது.




Marketed by:
**Greenstar Fertilizers Limited**
Customer Care No: 044 2230 0010

Available at:
எல்லா ஸ்பிக் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

# இலவச வேளாண் பயிற்சி



ஒவ்வொரு மாதமும் தூத்துக்குடி, ஸ்பிக் நிறுவனத்திலுள்ள வேளாண் பயிற்சி நிலையத்தில் அதிக வருமானம் பெற விரும்பும் விவசாயிகளுக் கென பிரத்தியேகமான பயிற்சிகள் நடத்தப் படுகின்றன.

## தமிழ்நாட்டிலேயே தலைசிறந்த பயிற்சி

- அனுபவம் மிக்க பயிற்சியாளர்களால் நடத்தப்படுகிறது.
- வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் -களால் பங்கு பெறுகிறார்கள்.
- துல்லிய பண்ணையம் சம்பந்தப்பட்ட சந்தேகங்கள் உடனுக்குடன் தெளிவிக்கப் படுகிறது.
- - பண்ணை விஜயம் அழைத்துச் செல்லப் படுகிறது.
- தூத்துக்குடி துறைமுகம் மற்றும் கடற்கரை சுற்றுலா உண்டு.

## பயிற்சிக்கு வர வேண்டுமானால்

- *18 முதல் 50 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மட்டும்*
- *உணவு, தங்கும் இடம், போக்குவரத்துச் செலவு அனைத்தும் இலவசம்.*
- *வேளாண்மையில் ஈடுபடும் பெண்களும் கலந்துக் கொள்ளலாம். குறைந்த பட்சம் 4 பேர் கொண்ட குழுவாகப் பதிவு செய்து கொண்டு வர வேண்டும்.*
- *கண்டிப்பாகக் குழந்தைகளை அழைத்து வரக்கூடாது.*
- *ஏற்கனவே பயிற்சி பெறாதவர்களுக்கு மட்டும்.*
- *கண்டிப்பாக 94433 25738, 94870 25738 எண்களை அழைத்து முன் பதிவு செய்து கொள்ள வேண்டும்.*

### 30.03.15 முதல் 01.04.15 வரை

பசுமைக் குடில்
கால்நடை பராமரிப்பு
வருமானம் தரும் காய்கறிகள்
உழவர் கூட்டமைப்பு
சொட்டு நீர்
உரமிடுதல்

### 08.04.15 முதல் 10.04.15 வரை

துல்லிய பண்ணையம்
சொட்டு நீர்
மண்வளம்
நபார்டு வங்கி திட்டங்கள்
காய்கறி பயிரிடுதல்
பயிர் பாதுகாப்பு

Registered with the Registrar of Newspaper for India. No. TNTAM/2011/36993
SPIC Pannai Cheithi Tamil bi-monthly Feb 2015 - Mar - 2015




Published by : N.Nachiappan on behalf of Southern Petrochemical Industries Corporation Limited and Published from SPIC Ltd., Muthaiahpuram, Tuticorin - 628 005, Tuticorin Dist., Tamil Nadu. and Printed by S.Daisy Rani at M/s. Chitrakannan Process, Old No.6/78D, New No.6/37, Samypuram Colony, Bye-pass road, Sivakasi - 626 189. Editor : T. Vijayakumar David